## ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்றால்

# ஊழல்வாதிகளை மட்டும் பா.ஜ.க.வில் சேர்த்துக்கொள்வது ஏன்?

## “நியூஸ் 7” தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் லட்சுமி சுப்பிரமணியன் கேள்வி!



லட்சுமி சுப்பிரமணியன் | சுகிதா சாரங்கராஜ்

**சென்னை, ஜன.7-**

**“நியூஸ் 7” தொலைக்காட்சியில் ‘குறிவைக்கப்படுகிறார்களா ‘இந்தியா கூட்டணி தலைவர்கள்?’ என்ற தலைப்பில் நடைபெற்ற கேள்வி நேரம் பகுதியில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய மூத்தப் பத்திரிகையாளர் திருமதி லட்சுமி சுப்பிரமணியன் “ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லிவிட்டு ஊழல்வாதிகளை பா.ஜ.க.வில் சேர்ப்பது ஏன்?” என்று ஆணித்தரமாகக் கேள்வி எழுப்பினார்.**

**‘நியூஸ் 7’ தொலைக்காட்சியில் திருமதி சுஜிதா சாரங்கராஜ் நெறியாளராகக் கொண்டு “குறிவைக்கப்படுகிறார்களா I.N.D.I.A கூட்டணி தலைவர்கள்?” என்ற தலைப்பில் நடைபெற்ற கேள்வி நேரம் பகுதியில் மூத்த பத்திரிகையாளர் திருமதி லட்சுமி சுப்பிரமணியனின் ஆணித்தரமான விவாதம் வருமாறு:**

**சுகிதா சாரங்கராஜ்:** லட்சுமி, ஒரு மணி நேரம் நான்கு பேர் இங்கே பேசியதையும் கேட்டீர்கள், பத்திரிகையாளராக சொல்லுங்கள், இந்தியா கூட்டணியினர் மீது வைக்கப்படும் ஈ.டி. குற்றச்சாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்? இப்போது அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கி, தேஜஸ்வி யாதவ் மீது வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் எத்தகையவை?

**லட்சுமி சுப்பிரமணியன்:** ஒரு உதாரணம் சொல்லி ஆரம்பிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். 2021 ஜூனில் சிவசேனா எம்.எல்.ஏ. பிரதாப் சன்னாயிக். அப்போது முதலமைச்சராக இருந்த உத்தவ் தாக்கரேவுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். “நீங்கள் பா.ஜ.க.வினரோடு முரண்பாடு களை விட்டு விடுங்கள், இனிமேல் அவர்களுக்கு எதிரான அரசியல் செய்ய வேண்டாம், எனக்கு ஈ.டி. சம்மன் வந்திருக்கு. 175 கோடி ரூபாய் ஊழல் என்கிற வழக்கிற்காக எனக்கு சம்மன் வந்திருக்கு. இனி பா.ஜ.க.வுக்கு எதிரான மனநிலையை பேசக்கூடியதை நாம் விட்டுவிடுவோம்” என்று மராத்தி யில் அவர் எழுதிய கடிதத்தில், அவரே சொல்கிறார்.

‘பா.ஜ.க.வுக்கு எதிரான நிலைப் பாட்டை நாம் விட்டு விட்டோம் என்று சொன்னால் நமக்கு எதிரான இந்த ஈ.டி. வழக்குகள் எல்லாம் துரிதப்படுத்தப் படாது’ என்பதை தான் அந்தக் கடிதத்தில் அவர் சொல்லி இருக்கிறார்.

அதற்குப் பிறகு ஏகப்பட்ட சிவசேனா எம்.எல்.ஏ.க்களால், மகாராஷ்டிரா அரசே கவிழ்ந்து, அந்த எம்.எல்.ஏ.க்கள் வெளியே வந்து, பா.ஜ.க.வோடு சேர்ந்து ஆட்சி அமைத்தார்கள் என்பது மிகப்பெரிய உதாரணம். இது சமீபகாலத்தில் நடந்ததுதான். மிகவும் பழைமையான தெல்லாம் கிடையாது.

சிவசேனாவில் இருக்கக் கூடிய முக்கால்வாசி எம்.எல்.ஏ.க்கள் பெரும்பாலும் இருபது, முப்பது பேர்களுக்கு ஈ.டி. சம்மன்ஸ் இருந்தது. இன்றைக்கு மகாராஷ்டிரா அரசில் இருக்கக் கூடிய முக்கியமான நபர்கள் அஜித்பவார் உள்பட, சஞ்சய் ராவுத்தர் உள்பட எல்லோருக்குமே ஈ.டி. சம்மன்ஸ் உண்டு. இந்த வழக்குகள் எல்லாம் என்ன ஆச்சு? திரும்ப அவர்களுக்கெல்லாம் சம்மன் வந்திருக்கா, அவர்கள் ஆஜர் ஆகி இருக்கிறார்களா, இல்லை அவர்களுக்கு கால நிர்ணயம் கொடுத்து இருக்கிறார்களா? இந்த வழக்கின் நிலைமை என்ன என்பது வெளியிலேயே வரவில்லை. அரசாங்கம் மாறிய பிறகு பெரிய அளவில் அவர்களுக்கு எல்லாம் சம்மன்ஸ் வந்ததா இல்லையா என்பது நமக்குத் தெரியவில்லை.

இன்றைக்கு அவர்கள் ஊழல் செய்யாதவர்களாக மாறி விட்டார்களா? என்பதற்கான விளக்கமும் கிடையாது. இது ஒன்றும் புதியது கிடையாது. ஏற்கனவே நாம் அஜித் பவாரை பார்த்துட்டோம், அதற்குப் பிறகு அபிசேக் பானர்ஜிக்கு சம்மன் வந்தது, இவர்கள் எல்லாம் பா.ஜ.க.விற்கு எதிரான நிலையில் இருக்கக் கூடியவர்கள் என்ற நிலையில்; இவை எல்லாம் வந்தது. இப்போது இருக்கக் கூடிய சூழலில் அவர்களுக்குரிய வழக்குகள் எல்லாம் துரிதப்படுத்தப்படவில்லை.

அடுத்து இப்போது தேஜஸ்வி யாதவுக்கும் சம்மன் வந்திருக்கு. ஹேமந்த் சோரன் ஜார்கன்ட் முதலமைச்சர் அவரையும் கைது செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கு. அவருடைய மனைவியை ஒரு வழக்கில் சம்மன் செய்திருக்கிறார்கள். இப்போது கெஜ்ரிவால் அவர்களுக்கு எதிராக இருக்கக் கூடிய இந்த வழக்கு, ஏற்கனவே அவருக்கு நவம்பரில் சம்மன் வந்த பொழுது, இதே மாதிரியான பேச்சுதான் இருந்தது. அவர் விரைவில், அதாவது மனீஸ்க்கு ஜாமீனே கிடைக்காத பொழுது, அவரை கைது செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கு என்று கெஜ்ரிவால்க்கு சம்மன் அனுப்பப்பட்டது என்கிற பேச்சுகள் அப்போதே எழுந்தது.

இன்றைக்கும் அதே மாதிரியான நிலைதான். ஆனால் இன்றைக்கு ஒரு படி முன்னால் போய் இருக்கு. போலீஸ் அவருடைய வீட்டு வாசலில் இருப்பதினால், அவர்களுடைய அமைச்சர் அஜீஸ், “எங்களுடைய முதலமைச்சர் மட்டுமல்ல எதிர்க் கட்சிகள்ஆட்சி நடத்தக் கூடிய மாநிலங்களில் இருக்கக் கூடிய முதலமைச்சர்களுக்கும் நாளைக்கு இதே போன்றதொரு நிலைமை வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை” என்று சொல்கிறார்.

பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக அரசியல் நிலைப்பாட்டில் இருக்கக் கூடியவர்களுக்கு எதிராக வழக்குகள் பாயும். அவர்கள் திரும்பவும் ஒருவேளை, இப்போது இந்தியா கூட்டணியில் இருந்து கெஜ்ரிவால் வெளியே வந்துவிட்டாலோ அப்படி இல்லை என்றால் இந்தியா கூட்டணியே சிதறிவிட்டது என்றாலோ, யார் மீதெல்லாம் வழக்குகள் பாய்ந்திருக்கோ அந்த வழக்குகள் எல்லாம் குறைந்துவிடும். அப்படி இல்லை என்றால் அவை எல்லாம் பேசப்படாமலேயே இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தான் இருக்கும்.

ஏற்கனவே மனீஷ் சூடியா மீதான வழக்கு, பெரிய அளவில் இதே எக்ஸ்ஸைஸ் வழக்குதான். அவருக்கு ஜாமீன் கிடைத்து இருக்கும். ஜாமீன் கிடைக்காமல் இருந்ததற்கான காரணம் பா.ஜ.க.வின் எதிர்ப்பு நிலைப் பாட்டில் அவர் தொடர்ந்து; மிகவும் வேகமாக அவர்களை எதிர்த்துப் பேசக் கூடிய இடத்தில் கெஜ்ரிவால் இருந்ததினால்தான்!

இப்படி யாரெல்லாம் அரசியலில் மாநில கட்சிக்கோ, ஒரு பிராந்திய கட்சிக்கோ அரசியலில் முக்கியமான நபராக பார்க்கப்படுகிறார்களோ அவர்களுக்கெல்லாம்தான் டார்க்கெட். அப்படித்தான் ஒவ்வொரு மாநிலத்திலும் நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், பக்கத்து மாநிலம் டி.கே. சிவக்குமார். இப்போது அங்கே காங்கிரஸ் ஆட்சி இருக்கு. டி.கே. சிவக்குமார் மீது எவ்வளவு வழக்குகள் பாய்ந்தன. எத்தனை முறை அவருக்கு சம்மன் வந்தது, சென்ற எம்.பி.தேர்தல் சமயத்தில் தான் தொடர்ந்து அவருக்கு எதிரான வழக்குகள் போடப்பட்டன. இன்னும் அந்த வழக்குகள் எல்லாம் நிலுவையில் தான் அவருக்கு எதிராக இருக்கிறது.

இங்கே தமிழ்நாட்டிலும் அதே போன்றதொரு சூழ்நிலை தான். ஆந்திராவில் கே.சி.ஆர். அவர்களுக்கு எதிரான வழக்குகள் எல்லாம் இருக்கு. இப்போது கவிதாவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் எல்லாம் என்ன ஆனது? ஏன், அந்த வழக்குகள் விரிவுபடுத்தப் படவில்லை. தமிழ்நாட்டில் இன்னும் ஆழமாக பேச வேண்டும் என்றால் கடந்தகால அ.தி.மு.க. ஆட்சி இருக்கும்போதும், ஐ.டி. ரைடுகள் நடைபெற்றன. நிறைய கன்ஸ்ட்ரக்சன் கம்பெனிகள், ஹைவே கான்ட்ராக்ட், இவை தவிர முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்பில் இருந்தவர்களுக்கும் ஐ.டி. ரெய்டுகள் வந்தன.

ஆனால், வழக்கமாக ஒரு ஐ.டி. ரெய்ட் நடக்கிறது என்றால், இன்கம்டாக்ஸ் சிறிது நாள் கழித்து ரிப்போர்ட் கொடுப்பார்கள். அப்படி இல்லை என்றால் அது குறித்த ஒரு கம்யூனிகேஷன் வரும், பெரும்பாலான ஐ.டி. ரெய்ட்களில் அதே மாதிரி எதுவும் எந்த ரிப்போர்ட்டும் வெளியே வரவில்லை. அதற்குப் பிறகு என்ன ஆகும்? ஒன்று ஈ.டி.அல்லது டி.ஆர்.ஐ. இரண்டு ஏஜென்சிகள் மூலம் விசாரணை நடத்தப்படும் வழக்குகள் பதியப்படும். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த சமயத்தில் ஐ.டி. ரெய்ட்ஸ்க்குப் பிறகு அதே மாதிரி எதுவுமே நடக்கவில்லை.

ஆனால், இங்கே இப்போது தி.மு.க. ஆட்சி வந்த பிறகு தொடர்ந்து நடக்கக் கூடிய ஐ.டி. ரெய்ட் மூலம் ஒரு கட்சி மட்டும் ஊழல் செய்வதாகவும், மற்ற கட்சிகள் எல்லாம் புனிதர்கள் மாதிரியும் ஒரு தோற்றம் உருவாக்கப் படுகிறது.

பிரதமர் உள்பட பா.ஜ.க. வில் இருக்கக் கூடிய தலைவர்கள் எல்லோருமே இந்தியா கூட்டணியின்மீது வைக்கக் கூடிய விமர்சனங்கள், ஊழல் கட்சிகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்திருக்கிறார்கள் என்பது தான். மற்றவர்கள் யாருமே ஊழல் செய்யவில்லையா? ஏற்கனவே ஊழல் செய்தவர்களை சிவசேனாவில் இருந்து ஊழல் செய்தவர்கள் என்று சொல்லப்படுவர்களாக இருக்கட்டும், இல்லை; காங்கிரஸ் கட்சியில் ஊழல் செய்தவர்கள் என்று சொல்லப்படுபவர் களாக இருக்கட்டும், அவர்கள் ஊழல் செய்தவர்கள் என்று தெரிந்துதானே, அவர்களை ஏன் பா.ஜ.க.வினர் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டார்கள்?

ஊழலுக்கு அப்பாற்பட்ட பா.ஜ.க. கட்சி, இதில் ஊழல் செய்தவர்கள் மீது நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்றால் ஏற்கனவே நீங்களே ஊழல்வாதிகள் என்று சொன்ன ஆட்களை கட்சியில் ஏன் சேர்த்துக் கொண்டீர்கள்? அது தான் நாம் எழுப்பக் கூடிய கேள்வி.

பா.ஜ.க. கட்சியைப் பொறுத்தவரைக்கும் தங்களுக்கு வாக்கு வங்கிக்கு பலம் சேர்க்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அதாவது ஊழல் செய்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை பாய்ந்திருந்தாலும் சரி; அப்படி இல்லை என்றால் நடவடிக்கை என்கிற பெயரில் அவர்களை கூட்டிக் கொண்டு வந்தாலும் சரி; அவர்களுடைய தேர்தல் அரசியலை மட்டுமே கவனத்தில் வைத்து இவை எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் திருமதி லட்சுமி சுப்பிரமணியன் விவாதத்தில் பேட்டியளித்தார்.

---

## சிவகங்கை-காரைக்குடியில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்தநாள் விழா!

### அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன்-மு.தென்னவன் பங்கேற்பு!

*சிவகங்கை, ஜன.7-*

*கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை காரைக்குடியில் அன்னதானங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் ஏற்பாட்டின் பேரில் சென்னை தூத்துக்குடியில் பெருமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொழுது காரைக்குடிநகராட்சியிலிருந்துசென்று பணியாற்றிய 40 துப்புரவு பணியாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.*

*இந்த நிகழ்ச்சியில் 40 துப்புரவு பணியாளர் களுக்கு சால்வை அறிவித்தும் இனிப்புகள் வழங்கியும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியப்பன் பாராட்டி பேசினார்.*

*இந்த நிகழ்ச்சியில் காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை, காரைக்குடி நகர செயலாளர் என்.குணசேக ரன், பொதுக்குழு உறுப்பினர் தெய்வானை இளமாறன், மகளிரணி நிர்வாகிகள் தமிழ்ச்செல்வி, தெரசாள், திலகவதி கண்ணன், நிர்மலா, செல்வம், புகழேந்தி, ஜெயந்தி, தகவல் தொழில் நுட்பணி அமைபாபாளர் கலாகாசிநாதன் சத்யா, காஞ்சனா, உட்பட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.*

*சிவகங்கை*

*சிவகங்கை மாவட்ட மகளிரணி சார்பில் மேலூர் சாலையில் உள்ள அன்னை இல்லத்தில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் ஏற்பாட்டின் பேரில் 50க்கும் மேற்பட்டவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.*

*மாவட்ட மகளீர் தொண்டரணி சார்பில் தாய் இல்லத்தில் மாவட்ட மகளீர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன் ஏற்பாட்டின் பேரில் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.*

*இந்த உணவினை மாவட்ட மகளிரணி அணி தலைவி திருமதி மணிமேகலை ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்து ராமலிங் கம் எம்.ஜெயராமன் ஒன்றியக்குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் தொண்டரணி துணை அமைப்பாளர்திலகவதி கண்ணன் ஆகியோர் வழங்கினார்கள்.*

*இந்த நிகழ்ச்சியில் தாய் இல்ல பொறுப்பாளர் டி.கே.புஷ்பராஜ், மகளிரணி நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, பாக்கியலட்சுமி விஜயகுமார், அழகுப்பிள்ளை குணசேகரன், சுதா சிவப்பிரகாசம், நதியாஇளஞ் செழியன், லதாநாகராஜ், செல்வராணி ஐயப்பன், வளர்மதி கலைச்செல்வன், வலைதள பொறுப் பாளர் திவ்யா சக்தி, ராஜேஸ்வரி, மஞ்சுளா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, எஸ்.எம். மதிவாணன், ஒன்றிய கழக நிர்வாகி கள் காஜமுகைதீன்,தொ.மு.ச. முருகேசன், சோமசுந்தரம், தகவல் தொழில் நுட்ப அணி அம்பலம், மனோகர்,பாலா, மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, சோமசுந்தரம், செந்தில்குமார், மருது பாண்டி, தருமர், ராஜாங்கம்,அழகுசுந்தரம், உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.*


இராயபுரம் தொகுதி 49வது வார்டு, கே.சி.எஸ். மேல்நிலைப்பள்ளியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி கலந்துகொண்டு 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கியும் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் பள்ளி தலைவர், செயலாளர், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், வட்ட செயலாளர் கார்டன் சதிஷ் குமார், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

---

## உளறிக் கொட்டுவதை நிறுத்தினால் நல்லது!

# ஒன்றிய நிதிஅமைச்சருக்கு “இந்தியாவின் கோயபெல்ஸ்” பட்டம் உறுதி!

### “தீக்கதிர்” நாளேடு தலையங்கம்!

*சென்னை, ஜன. 7-*

*மழை வெள்ள நிவாரண நிதி குறித்து ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உளறி கொட்டி வருகிறார். இந்நிலை தொடர்ந்தால் “இந்தியாவின் கோயபெல்ஸ்” என்ற பட்டம்தான் அவருக்கு கிடைக்கும் என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*அது வருமாறு:-*

*தமிழ்நாட்டில் கனமழை மற்றும் பெரு வெள்ளத்தால் மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்பட்டன. அதனைச் சரி செய்ய மாநிலத்திற்கு பேரிடர் சிறப்பு நிவாரண நிதி வழங்கவேண்டும் என்று பிரதமரை சந்தித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார். திருச்சியில் பிரதமர் கலந்துகொண்ட விழாவிலும் இதே கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனால் ஒன்றிய அரசு உரிய நிதியளிக்க மறுத்து சண்டித்தனம் செய்து வருகிறது.*

*இரு தவணைகளாக அளிக்கப்பட்ட ரூ.900 கோடியும் ஏற்கனவே கொடுப்பதாக கூறிய நிதியே தவிர, பேரிடர் சிறப்பு நிதி அல்ல. இது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை அவமதிக்கும் செயல் என்று ஒட்டு மொத்த அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்த பின்னரும் ஒன்றிய அரசு திருந்தவில்லை. இதோடு நிற்கா மல், மாநில அரசுக்கு அதிகமான நிதி வழங்கி யது போன்று தவறான தகவல்களை பரப்பி வருகிறது.*

*சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழகத்தில் இருந்து பெற்ற வரியை விட அதிகமான நிதியை ஒன்றிய அரசு வழங்குவதாக கூறியது எந்த அளவுக்கு வடிகட்டிய பொய் என்பதை தமிழக அரசு உடனடியாக அம்பலப் படுத்தியுள்ளது. “ஒன்றிய அரசு 2014 -15ம் ஆண்டு முதல் 2022 - 23 ஆம் ஆண்டு வரை ரூ.4.75 லட்சம் கோடி ரூபாய் தமிழகத்துக்கு வழங்கி யுள்ளது. இந்த ரூ.4.75 லட்சம் கோடியில் ரூ.2.46 லட்சம் கோடி என்பது மத்திய வரிகளில் இருந்து வரி பகிர்வாகவும், ரூ.2.28 லட்சம் கோடி என்பது தமிழகத்துக்கு கிடைக்கவேண்டிய மானியங்கள் மற்றும் உதவித்தொகை அடிப்படையில் வழங் கப்பட்டவைதான்.*


தீக்கதிர்

2024 ஜனவரி 06 சனிக்கிழமை

இந்தியாவின் கோயபெல்ஸ்

தமிழ்நாட்டில் கனமழை மற்றும் பெரு வெள்ளத்தால் மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்பட்டன. அதனைச் சரி செய்ய மாநிலத்திற்கு பேரிடர் சிறப்பு நிவாரண நிதி வழங்கவேண்டும் என்று பிரதமரை சந்தித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார். திருச்சியில் பிரதமர் கலந்துகொண்ட விழாவிலும் இதே கோரிக்கையை வலியுறுத்தினார். ஆனால் ஒன்றிய அரசு உரிய நிதியளிக்க மறுத்து சண்டித்தனம் செய்து வருகிறது.

இரு தவணைகளாக அளிக்கப்பட்ட ரூ.900 கோடியும் ஏற்கனவே கொடுப்பதாக கூறிய நிதியே தவிர, பேரிடர் சிறப்பு நிதி அல்ல. இது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை அவமதிக்கும் செயல் என்று ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்த பின்னரும் ஒன்றிய அரசு திருந்தவில்லை. இதோடு நிற்கா

*அதேநேரத்தில் நேரடி வரிவருவாயாக தமிழ கத்தில் இருந்து ரூ.6.23 லட்சம் கோடி ஒன்றிய அரசு பெற்றுள்ளது. இதில் எவ்வளவு தொகை மாநில அரசுக்கு ஒன்றிய அரசு கொடுத்துள்ளது என்று கேட்டால் பா.ஜ.க. அரசு பதிலளிக்க மறுக்கிறது. தமிழகத்தில் இருந்து ஒன்றிய அரசுக்கு செல்லும் ஒரு ரூபாய்க்கு மீண்டும் அங்கிருந்து தமிழகத்துக்கு கிடைப்பது வெறும் 29 பைசா தான். ஆனால், பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் குறைவாக வரி வசூலித்துக் கொடுத்தாலும் திரும்ப அளிக்கப்படும் நிதி அதிகமாக உள்ளது.*

*12வது நிதிக் குழு மத்திய வரியில் இருந்து தமிழகத்துக்கு 5.30விழுக்காடு வரி பகிர்வாக வழங்கியது. தற்போது இது 4.079 விழுக்காடாக குறைந்துள்ளது. தமிழ்நாட்டுக்கு கொடுக்க வேண்டிய உரிய நிதி வரவில்லை என்பதற்கு இதை விட விளக்கமும் விபரமும் தேவை யில்லை. இதன் பின்னரும் ஒன்றிய நிதியமைச்சர் உளறிக் கொட்டுவதை நிறுத்தினால் நல்லது. இல்லை என்றால் இந்தியாவின் கோயபெல்ஸ் என்ற பட்டம் தான் அவருக்கு கிடைக்கும்.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*


மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 17 ஆவது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்பு மற்றும் பள்ளியில் பணி புரியும் பணியாளர்களுக்கு நிவாரண பொருட்களும் வழங்கப்பட்டன. இதில் கே.கருணாகரன், எச்.பீர்முகமது, எஸ். சிவக்குமார், சி.மூர்த்தி, எஸ்.பாலாஜி, முத்துவேல், டாக்டர் எம்.மைக்கேல், பி.செந்தில் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.